**தலைப்பு 279 - கேகாலை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கேகாலை மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஜுன் 22 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமை கணக்காய்வு அறிக்கை 2021 ஜுன் 21 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கேகாலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை பெற்றுக் கொள்கையில் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணலின் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதல் பெறப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என மதிப்பிடல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த முன்வைப்பு மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

ஆதனப் பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டு நிதிக்கூற்றின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் நிலவிய ரூபா 1,390,790,095 ஆன ஆதனப் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப மீதியாக எடுக்கையில் ரூபா 2,258,600,729 ஆக திருத்த்பபட்டிருந்தது.<br>எவ்வாறாயினும் திறைசேரியினால் ரூபா 860,224,482 ஆன ஆரம்ப மீதியிற்கு மேற்கொண்டுள்ள திருத்தங்கள் மேற்கொண்ட முறை பற்றி கணக்காய்விற்கு உறுதியாகவில்லை. | திறைசேரியினால் திருத்தங்கள் மேற்கொள்வதனால் இவ் வித்தியாசம் ஏற்பட்டுள்ளதாக. | திறைசேரியினால் மேற்கொண்ட திருத்தங்கள் தொடர்பாக ஆவணப்படுத்தப்பட்ட உறுதிபாடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று – ஏசீஏ 6 பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியல் நடைமுறை வேலைகளின் பெறுமதியொன்று காட்டப்படாத போதும், நிதியல்லாத சொத்துக்கள் திரண்ட அறிக்கை - எஸ்ஏ 82 இல் நடைமுறை வேலையாக ரூபா 27,162,611 ஆன பெறுமதியொன்று காட்டப்பட்டிருந்தது. | பொதுக் கணக்குகள் திணைக்களத்தின் உதவியை பெற்று சீர் செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று**
---------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆளணி சம்பளங்கள் படிகள் மற்றும் செயற்பாட்டு செலவின் கீழ் காட்ட வேண்டிய ரூபா 13,770,304 தொகை பௌதீக சொத்து நிர்மாணம் அல்லது கொள்வனவின் கீழ் குறிப்பிடப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளுடன் கூடிய காசுப் பாய்ச்சல் அதற்கு சமமான அளவினால் கூடுதலாகவும் முதலீட்டு நடவடிக்கைகளுடன் கூடிய காசுப் பாய்ச்சல் அதற்கு சமமான அளவினால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | அச் செலவுகள் முதலீட்டுத் தன்மையை பெறுவதனால் பௌதீக சொத்து நிர்மாணம் அல்லது கொள்வனவின் கீழ் உள்ளடக்கியுள்ளதாக. | குறித்த காசுப் பாய்ச்சலை சரியாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு தொடர்பில் மாவட்ட செயலகத்தினால் கோரப்பட்ட கட்டுநிதி பெறுமதி ரூபா 6,554,532,905 ஆனதுடன் ஆண்டில் கிடைத்த கட்டுநிதி ரூபா 4,807,827,877 மாத்திரமே ஆனது. அதன் பிரகாரம் கோரிய கட்டுநிதி அளவைவிட குறைவாகக் கிடைத்த கட்டுநிதி பெறுமதி ரூபா 1,746,705,028 ஆனது. | ஏதேனும் ஒரு மாதத்தில் கோரி கிடைக்காத கட்டுநிதி அடுத்த மாதத்திலும் கோரப்படுவதனால் கோரப்படும் மொத்த கட்டுநிதி அளவு கூடியிருப்பதாக. | திறைசேரியுடனான நெருங்கிய தொடர்புகளுடன் கட்டுநிதி முகாமைத்துவத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களின் ஒதுக்கீட்டின் மீது நிறைவேற்றிய அபிவிருத்தி கருத்திட்டங்களிற்காக மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய பட்டியல்களின் கையிருப்பு பெறுமதி ரூபா 12,012,042 ஆனது. அவற்றில் ரூபா 10,650,849 ஆன பட்டியல்கள் 2021 ஏப்ரல் மாதமலவிலும் தீர்க்கப்பட்டிருக்காததுடன் ஒதுக்கீடு கிடைக்காததன் காரணமாக தொடர்ந்தும் 2019 ஆண்டிற்கான தீர்க்கப்பட வேண்டிய பட்டியல்களின் பெறுமதி ரூபா 1,361,193 ஆனது. | ஒதுக்கீடு கிடைக்காதன் காரணமாக தீர்க்க முடியாததாக. | திறைசேரியுடனான நெருங்கிய தொடர்புகளுடன் ஒதுக்கீட்டை தாமதமின்றி பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உருதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலக நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுறுதிமிக்க உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை தயாரித்து | உள்ளக வழிகாட்டல் வெளியிடப்பட்ட போதும் கணக்காய்விற்கு | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 |

| | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்துவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உருதிசெய்ய வேண்டியதுடன் அம் முறைமையின் ஆக்கபூர்வதன்மை தொட்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமை ஆக்கபூர்வமாக முன்னெடுக்க தேவையான மாற்றங்கள் செய்ய வேண்டுமெனவும், அம் மீளாய்வுகளை ஆவணரீதியாக மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொண்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்பிக்கவில்லை எனவும் எதிர்காலத்தில் சமர்பிக்க நடவக்கை எடுப்பதாகவும். | பிரிவில் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.4 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கேகாலை மாவட்ட செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்கள் தொடர்பான 04 வைப்புக் கணக்குகளில் 2020 திசெம்பர் 31 திகதியில் வைப்பு மீதி ரூபா 336,598,104 ஆனதுடன் அவற்றில் காணி வைப்புகள் தவிர நிதிப் பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத 02 ஆண்டுகளை விஞ்சிய வைப்பு மீதி ரூபா 25,305,912 ஆனது. இவற்றில் 5 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 16,450,481 ஆன வைப்பு மீதியொன்று கேகாலை மாவட்ட செயலக நிர்வாணம் தொடர்பாக ஒப்பந்தக்காரர் உரிய செயற்பாட்டை செய்யாததன் காரணமாக காசாக்கப்பட்ட முற்பண பிணைமுறி மற்றும் அது வரை கொடுப்பனவுகளுக்கான கையிருப்பு காசானதுடன் தற்போது புதிய ஒப்பந்தக்காரின் கீழ் நிர்மாணிக்கப்படும் கருத்திட்டமொன்றானது. | கையிருப்பு வைப்புகள் உரிய நிறுவனத்திடம் விசாரித்து அரச வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் மாவட்ட செயலக நிர்மாணத்துடன் தொடர்பான நிறுத்தற் பணத்தை 2021 செப்தம்பர் 01 திகதியளவில் தீர்க்க முடியுமென. | வைப்புக்களை உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்த மற்றும் நிதிப்பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கையில் வறுமையை, சமூக கட்டப்பாட்டு முறைமையொன்றின் பயன்பாட்டுடாக ஒழிக்கும் நோக்கில் ஜனாதிபதி செயல நிலைபேறான அபிவிருத்தி அலகினூடாக அறிமுகப்படுத்தியிருந்த கிராம சக்தி மக்கள் செயற்பாட்டின் கீழ் பொது சங்கங்களை நிறுவ 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் கிடைத்த ஒதுக்கீட்டின் மீது முதலாம் கட்டத்தின் கீழ் 11 பிரதேச செயல பிரிவுகளில் 43 பொது சங்கங்களிற்கு ரூபா 69,575,200 உம் 2019 ஆண்டில் இரண்டாம் கட்டத்தின் கீழ் 11 பிரதேச செயல பிரிவுகளில் 96 பொது சங்கங்களிற்கு ரூபா 4,560,000 உம் வழங்கப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டு இறுதியில் முதற்கட்டத்தில் வழங்கிய தொகையில் 71 சதவீதமாக 34 சங்கங்கள் ரூபா 49,812,357 உம், இரண்டாம் கட்டத்தில் வழங்கிய தொகையில் 96 சதவீதமாக 96 சங்கங்கள் ரூபா 4,358,021 உமாக குறித்த செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்படாது அச் சங்கங்களின் வங்கிக் கணக்குளில் காணப்பட்டன. | இவ் வேலைத்திட்டம் ஜனாதிபதி செயலகத்தினால் அகற்றப்பட்டுள்ளதுடன் தற்போது சௌபாக்கிய செயலணியிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அச் செயலணியினூடாக கிராம சக்தி சங்கங்களின் பதிவை கம்பனிகள் ஊடாக அகற்றி எஞ்சிய நடவடிக்கைகள் இடம்பெறுவதாக. | ஒதுக்கீடு உரிய நோக்கத்திலான செயற்பாடுகளிற்கு ஈடுபடுத்தப்பட வேண்டியமை. |

### 3.2 எதிர்பார்த்த நலன்களை (outcome) அடைந்து கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இஸ்மாட் இலங்கை நிறுவன பணிப்பாளர் நாயகத்தின் 2019 மே 21 திகதிய PS/SD/SMART-OP-01 இலக்க கடிதம் பிரகாரம் இஸ்மாட் இலங்கை வேலைத் திட்டத்தின் கீழான மொன்பொருள் பயன்பாட்டுடன் கிராம மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரையான வேலைவாய்ப்பு எதிர்பார்க்கும் சேவை பெறுனர்களிற்காக, வியாபார | இவ் வேலைத்திட்டம் தற்போது மனித வளம் மற்றும் தொழில்வாய்ப்பு திணைக்களத்திற்கு சுவீகரிக்கப்பட்டுள்ளது என மற்றும் அதன் கீழ் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக. | உரிய கருத்திட்டத்தை எதிர்பார்த்த நோக்கத்திலான செயற்பாடுகளிற்கு ஈடுபடுத்தப்பட வேண்டியமை. |

நிறுவனங்கள், அவற்றின் தொழிலகள், உற்பத்தி சந்தப்பங்கள், தொழிநுட்ப சேபை பயிற்சி, நிவாரண விலையில் தொழிநுட்ப உபகரணங்கள், நிதிச் சேவைகள் மற்றும் அவை வழங்கும் நிறுவனங்கள் என்பன தொடர்பான தகவல்களை உள்ளடக்கி தொழில் வங்கியொன்றாக மற்றும் வழிகாட்டி ஒன்றாக செயற்பட்டு இளைஞர் தொழிலற்றோறை குறைக்க திட்டமிடப்பட்டிருந்தது. அதன் கீழ் கேகாலை மாவட்ட செயலகத்திற்கு கிடைத்த ஒதுக்கீட்டின் மீது கழிகமுவ, ருவன்வெள்ள, தெஹியோவிட மற்றும் றமுக்கன பிரதேச செயலகங்களிற்கு இஸ்மாட் இலங்கை மத்திய நிலையங்களை அமைக்க ரூபா 1,744,015 உம் அறிமுகம் மற்றும் பயிற்சி வேலைத் திட்டங்களிற்கு ரூபா 241,278 ஆக ரூபா 1,985,293 மீளாய்வாண்டு இறுதியில் செலவிடப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக பிரதேச செயலகங்களில் உரிய வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த மென்பொருடன் 22 கனணிகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் கணக்காய்வு சந்தர்பமான 2021 மார்ச் வரையிலும் இஸ்மாட் இலங்கை வேலைத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்கான செயற்பாடு நிலையில் இருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ஆ) மண்சரிவு மற்றும் மண்சரிவு அபாய நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீள் குடியேற்றும் கருத்திட்டத்தின் கீழ் 2016 ஆண்டு ருவன்வெல்ல பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் 78 குடும்பங்கள் இனங்காணப்பட்டிருந்தன. அவற்றில் 28 குடும்பங்கள் பல காரணங்களினால் நலன்கள் வழங்க உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் எஞ்சிய 50 குடும்பங்களிற்கிடையில் 15 குடும்பங்களினால் தங்கள் வீடுகளின் நிர்மாணங்களை மீளாய்வாண்டு இறுதி வரை பூர்த்தி செய்யாததால் செலுத்தாது காணப்படும் வீட்டு உதவித் தொகை ரூபா 4,850,000 ஆனது. அவ்வாறே மொரளியவத்த பிரதேசத்தில் அமைந்துள்ள இவ் வீடமைப்பு கருத்திட்டத்திற்காக நீர் விநியோக முறைமையொன்று அமைக்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வு சந்தர்ப்பமான 2021 பெப்ரவரி வரை நீர் விநியோகம் வழங்கியிருக்கவில்லை. | சில வீட்டு உடமையாளர்கள் அரசினால் வழங்கிய பிரமாணங்களிற்கு அமைய வீடமைப்பை மேற்கொள்ளாததால் தவணை கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ள தாக. | காணப்படும் பிரச்சினையை தீர்த்து வீட்டு உதவி செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பெண்கள் மற்றும் சிறுவர்கள் நடவடிக்கை அமைச்சிலிருந்து 2018 ஆண்டு கிடைத்த ரூபா 1,500,000 ஒதுக்கீட்டின் மீது யடியன்தொட்ட பிரதேச செயலக அதிகார பிரதேசத்திற்குட்பட்ட தெளிகல கிராம அலுவலர் பிரிவில் இங்கிரியாவத்த பிரதேசத்தில் பெண்கள் உற்பத்தி விற்பனை கூடம் மற்றும் சுகாதார பாதுகாப்பு வசதிகள் மேன்படுத்தும் நடவடிக்கைகள் (மலசலகூடம் 02) 2018 இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எனினும் கணக்காய்வு கள பரிசோதனை திகதிய 2021 ஏப்ரல் 21 திகதி வரை குறித்த நிர்மாணம் நோக்கத்துடனான செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படவில்லை. | மீண்டும் விற்பனை கூடங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக. | கருத்திட்டம் முடிவடைந்தவுடனே நோக்கத்திலான செயற்பாடுகளிற்கு பயன்படுத்த வேண்டியமை. |
| (ஈ) | கிராம எழுச்சி துரித அபிவிருத்தி வேலைத் திட்டம் - 2019 இன் கீழ் யடியன்தொட்ட பிரதேச செயலக அதிகார பிரதேசத்திற்குட்பட்ட பனாவத்த இலக்கம் 01 நீர் கருத்திட்டத்திற்காக ரூபா 970,000 ஆன ஒதுக்கீடு கிடைத்திருந்தது. குறித்த கருத்திட்ட கிணற்றின் அகழ்வு வேலைகளின் போது கல்லொன்று எட்டியதன் காரணமாக தொடர்ந்தும் அகழ்வு வேலைகள் மேற்கொள்ளப்படாததுடன் மேற்கொண்ட வேலைகளிற்கு ஒப்பந்தக்காரரிற்கு ரூபா 101,920 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வு கள பரிசோதனை திகதிய 2021 ஏப்ரல் 21 திகதி வரை குறித்த வளாகம் பயன்படுத்த முடியாத நிலைக்கு புற்கள் முலைத்து காணப்பட்டதுடன் கருத்திட்ட நோக்கமான பிரதேச மக்களுக்க குடிநீர் வழங்கலையும் மேற்கொள்ள முடியாதிருந்தது. | மக்களிற்கு பயன்பெற முடியுமான கருத்திட்டமொன்றாக தயாரித்து தருமாறு பிரதேச சபை தவிசாளரிற்கு அறிவித்துள்ளதாக. | தாமதமின்றி வேறு மாற்று நடவடிக்கை எடுப்பதன் மூலம் குறித்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**3.3 கருத்திட்டங்கள் மேற்கொள்வதன் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மண்சரிவால் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்ற அறநாயக பிரதேச செயலக பிரிவின் ஹபலக்காவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள 03 | ஏனைய ஒருங்கிணைப்பு நிறுவனங்களின் தாமதம் மற்றும் காணி உரிமையாளர்களிற்கு | குறித்த நிறுவனங்களுடனான உரிய தொடர்புகளுடன் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ரூட் 12 பர்சஸ் அளவான கொபேகடுவஹேன எனும் காணியை சுவீகரிக்கும் நடவடிக்கை 2016 ஆண்டு ஆரப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டு இறுதிவரையும் காணி சுவீகரிப்பு நடவடிக்கை மற்றும் காணி உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கை முடிவடைந்திருக்கவில்லை. | இழப்பீடு வழங்க காணி அமைச்சினால் இது வரை ஒதுக்கீடு கிடைக்காமை. | மேற்கொள்ள வேண்டியமை. |
| (ஆ) | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சிடமிருந்து கிடைத்த ரூபா 17,339,861 ஒதுக்கீட்டின் மீது 2018 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கேகாலை நில்வத்த 80 கன மீட்டர் கொள்ளலவு கொண்ட பெரோ சீமேந்து நீர் கோபுர நிர்மாண கருத்திட்டத்திற்காக மீளாய்வாண்டு இறுதி வரையும் நீர் விநியோகம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நீர் தாங்கி நடவடிக்கை முடிவடைந்துள்ளதாக மற்றும் தாமதமின்றி நீர் விநியோகம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக. | கருத்திட்டத்தை தாமதமின்றி நோகத்துடனான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டியமை. |
| (இ) | மாவனல்ல பிரதேச செயலக பிரிவில் இடம்பெயர்ந்த 88 குடும்பங்களிற்காக காணி வழங்க பெருந்தோட்ட நிறுவனத்திற்கு சொந்தமான அபதெனிய வத்தே அபதெனிய பிரிவிலிருந்து 25 ஏக்கர்களை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் 2016 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனினும் ஆரம்ப தளக்கோலம் தயாரித்தல், நிலைமை அறிக்கை பெற்றுக் கொள்ளும் தாமதம் மற்றும் காணி உரிமை பற்றிய பிரச்சினை காரணமாக காணி சுவீகரிக்கும் நடவடிக்கை மீளாய்வாண்டு இறுதி வரை முடிவடைந்திருக்கவில்லை. | ஏனைய ஒருங்கிணைப்பு நிறுவனங்களின் தாமதம் காரணமாக சுவீகரிக்கும் நடவடிக்கை தாமதித்ததாக. | குறித்த நிறுவனங்களுடன் தொடர்புபட்டு சுவீகரிக்கும் நடவடிக்கையை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டியமை. |

## 3.4 தேசிய நிதியங்களினால் நடைமுறைப்படுத்திய கருத்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராம எழுச்சி வேலைத் திட்டத்தின் கீழ் கேகாலை பிரதேச செயலகத்திற்கு கிடைத்த ஒதுக்கீட்டின் மீது கேகாலை பிரதேச சபையினால் ரூபா 970,000 கிரயத்திற்கு 2019 ஆண்டலவில் | ஒப்பந்தக்கார கமநல சங்கத்தினால் குறைபாடுகளை சீர்செய்வதாக மற்றும் உள்ளூராட்சி உதவி | கருத்திட்டம் தொடர்பில் போதிய மேற்பார்வை றேகொள்ள வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஹெட்டிமுள்ள ரஜமாவத்தை அபிவிருத்தியுடன் தொடர்பான நிர்மாணப் பணிகள் 03 பகுதிகளாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இப்பாதையின் பௌதீக பரிசோதனையின் போது கொன்கிரீட் தட்டின் மேற்பகுதியில் உள்ள கற்கள் விலகியருந்ததுடன் பாதை மேற்பரப்பில் சிறிய குழிகள் காணப்பட்டன. அதன் காரணமாக இப்பாதையை நிரிமாணிக்கையில் பயன்படுத்திய கலவையின் தகைமை பிரச்சினைக்குரியதாக இருந்தது. | ஆணையாளரினால் விசாரணை மேற்கொள்வதாக பிரதேச சபையினால் அறிவித்திருப்பதாக. | |

**3.5 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

மாவட்ட செயலகங்களிற்குரிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகளில் உள்ளடங்கியிருந்த, பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத பந்திகளிற்கான தொடர்பு பின் வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு மாடிகளுடன் கூடிய துத்திரிபிடிய பேருந்து தரிப்பிடம் ரூபா 23,570,905 ஆன மதிப்பீட்டிற்கு நிர்மாணிக்க 2014 பெப்ரவரி 19 திகதி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக் கருத்திட்டத்திற்காக ரூபா 3,988,900 செலவிடப்பட்டு நிர்மாணப் பணிகள் இடை நடுவே நிருத்தப்பட்டிருந்தது. இக் காணி அரசிற்கு சொந்தமான காணி ஒன்றாகையால் அறநாயக பிரதேச சபைக்கு ஒப்படைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் மாகாண காணி ஆணையாளரிற்கு அறிவித்து அனுப்பப்பட்ட போதும் மீளாய்வாண்டு இறுதி வரை இச்செயற்பாடு நிறைவேறி இருக்கவில்லை. | ஒப்பந்தக்கார நிறுவனமான அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் நிர்மாணம் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளதாக மற்றும் அறநாயக பிரதேச சபையின் கோரிக்கை பிரகாரம் இக் காணியை வேறு நடவடிக்கைக்காக பயன்படுத்த மாகாண காணி ஆணையாளரிடம் அங்கீகாரம் கோரியிருப்பதாக. | கருத்திட்டத்தை திட்டமிடுகையில் செலவிடும் தொகையிற்கு பிரதிபலன் கிடைக்கும் வகையில் திட்டமிட வேண்டியமை. |
| (ஆ) | தேசிய கொள்கைகள் பொருளாதார நடவடிக்கை மீள்குடியேற்றம் மற்றும் புணரமைப்பு மாகாண அபிவிருத்தி இளைஞர் விவகார அமைச்சின் கிராம உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மாவட்ட செயலகத்திற்கு கிதுள்கல நகர அபிவிருத்தி கருத்திட்டத்தை செயற்படுத்த 2019 ஆண்டு ரூபா 35,615,876 ஆன ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. அதன் கீழ் 0.8 கிலோ மீட்டர் நீளமான கிதுள்கல | மாகாண ஆளுனர் அவர்களுடன் கலந்துரையாடி புதிய கருத்திட்டமொன்றாக ஆரம்பிக்கும் இயமுமை பற்றி நடவடிக்கை எடுப்பதாக. | புதிய கருத்திட்டத்தை திட்டமிடுகையில் செலவிடும் தொகையிற்கு பிரதிபலன் கிடைக்கும் வகையில் திட்டமிட வேண்டியமை. |

நகர மத்திய பாதை இரு புறமும் விரிவாக்கி பக்க கால்வாய் நிர்மாணிக்க ரூபா 25,698,900 தொகைக்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இக் வேலையை மேற்கொள்கையில் வெளித்தரப்பு ஒருவரினால் தொடுக்கப்பட்ட தாக்கம் காரணமாக 2019 நவம்பர் 29 திகதி முதல் நிர்மாணப்பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தன.

**4 நல்லாழுகை**

**4.1 பொது மக்களிற்காக சேவை வழங்கல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2008 பெப்ரவரி 06 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 05/2008 பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் தமது நிறுவனத்திற்கான பிரஜைகள் பிரகடனத்தை அறிமுகம் செய்ய வேண்டிய போதும், குறித்த சுற்றறிக்கை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 12 வருடங்களை விஞ்சியிருந்த போதும் கேகாலை மாவட்டத்தில் 04 பிரதேச செயலகங்களில் பிரஜைகள் பிரகடனத்தை தயாரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரஜைகள் பிரகடனத்தை தயாரித்திருக்காத பிரதேச செயலகங்களிற்கு தயாரித்து சமர்பிக்குமாறு அறிவித்துள்ளதாக. | சுற்றறிக்கை பிரகாரம் அனைத்து பிரதேச செயலகங்களும் பிரஜைகள் பிரகடனத்தை தயாரிக்க வேண்டியமை. |

**5 மனித வள முகாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ருவன்வெள்ள பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் 2020 ஜனவரி முதல் ஒக்தோபர் வரையான காலத்தில் வடமத்திய மாகாண சபையில் நூலக சேவைகள் சபையின் தலைவராக செயற்பட்டிருந்தார். எனினும் இவ் உத்தியோகத்தரை வடமத்திய மாகாண சபையிற்கு விடுவிப்பது தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளரிடம் பெற்ற அங்கீகாரம் காணப்படவில்லை. | வடமத்திய மாகாண ஆளுனரின் கோரிக்கை பிரகாரம் விடுவித்ததாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் அதற்குரிய முறையான அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதாக. | முறையான அங்கீகாரத்துடன் ஊழியர்கள் விடுவிக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாவட்ட செயலகத்தில் மற்றும் 11 பிரதேச செலயகங்களில் 2020 திசெம்பர் 31 திகதியன்று அங்கீகார ஆளணி 1973 ஆனதுடன் உள்ளவாரான ஆளணி 1825 ஆனது. அங்கீகார ஆளணியின் நிலவிய 148 வெற்றிடங்களில் 80 வெற்றிடங்கள் கிராம உத்தியோகத்தர் பதவிக்குரியதானதுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிகள் 7 வீதம் காணப்பட்டன. நிலவுகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கையான 572 இனை கவனிக்கையில் வெற்றிட எண்ணிக்கை 14 சதவீத அளவானது. | பதவியொன்றிற்கு ஆட்சேர்க்க பிரதேச செயலாளரிற்கு அதிகாரம் இல்லாததால் வெற்றிடம் ஏற்பட்ட உடனே உரிய அதிகாரிகள் அறிவூட்டப்படுவதாக. | முக்கிய ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |